[18th March 1964

தனியார் ஆரம்பப் பள்ளிகளைப் பஞ்சாயத்துக்களுக்கு மாற்றுதல்

*** 314** கேள்வி.—**திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தனியார் நடத்தும் ஆரம்பப் பள்ளிகளை அந்தந்த வட்ட பஞ்சாயத்து யூனியன்களே ஏற்று நடத்துமாறு செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

Accused evading arrests in Salem district

* 315 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of accused wanted in connection with various crimes in Salem district, who are evading arrest for the last three years ; and

(*b*) whether special efforts could be taken for apprehending the culprits?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Sixteen.

(*b*) Yes. All efforts are being taken to apprehend the accused.

(அ) 16.

(இ) ஆம். இக்குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு குற்றவாளி நெடுநாட்களாகத் தலைமறைவாக இருக்கிறார். அவரைக் கண்டு பிடிப்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

MR. SPEAKER : The question is not definite. The Hon. member must put a definite and specific question. He cannot ask why a particular person has not been arrested.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்த 16 பேர்களில் எத்தனை பேர் கொலை சம்பந்தப்பட்ட வழக்குகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் ? அவர்களைக் கண்டுபிடிப்பதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் நான்கு பேர். கொலை செய்ய யத்தனித்தவர் ஒருவர். மற்றவர்கள் இதர கேஸ்களில் சம்பந்தப்பட்டவர்கள்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : அவர்களைக் கண்டுபிடிக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திரு பூ. கக்கன் : முதலிலே நான் சொன்னேன், எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று. (சிரிப்பு).

கனம் சபாநாயகர் : சட்டப்படி எடுக்கக்கூடிய எல்லா முயற்சிகளும் என்று அர்த்தம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : எல்லா முயற்சிகளும் என்பதிலே எவை எவை அடங்கும் ?

கனம் சபாநாயகர் : கிரிமினல் புரொஸீசர் கோடில் இரண்டு மூன்று செக்ஷன்கள் இருக்கின்றன. ஒரு ஆளைக் காணவில்லை என்றால் என்ன செய்ய வேண்டுமென்று அந்த சட்டத்தில் இருக்கிறது. அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் அந்த செக்ஷன்களை படித்திருக்க மாட்டார்கள் இல்லையா ?

கேள்விகள் முடிவடைந்தன.